**1979 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க இலங்கை மகாவலி அதிகாரசபைச் செய்சட்டத்தின் 22 (4) ஆம் பிரிவின் கீழான கட்டளை**

1979 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க இலங்கை மகாவலி அதிகார சபைச் செய்சட்டத்தின் 22 (4) ஆம் பிரிவின்கீழ் எனக்குரித்தாக் கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் மகாவலி அபிவிருத்தி அமைச்சர் காமினி திசாநாயக்கா ஆகிய நான் கமத்தொழில் அபிவிருத்தி, ஆராய்ச்சி அமைச்சரின் ஒருப்பாட்டுடனும் ஜனாதி பதி அவர்களின் அங்கீகாரத்துடனும் குறித்த செய்சட்டத்தின் "ஆ" பட்டோலையை இத்தால் பின்வருமாறு திருத்தியமைக்கின் றேன்.

"ஆ" பட்டோலையானது "1973 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக் கக் கமத்தொழில் காணிச் சட்டத்தையும், 1972 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்கக் கமத்தொழில் உற்பத்திப் பெருக்கச் சட்டத்தை யும்" நீக்குதல் மூலமும், 1979 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்கக் கமநல சேவைச் செய்சட்டத்தைச் சேர்த்துக்கொள்ளல் மூலமும் இத்தால் திருத்தி அமைக்கப்படுகின்றது.

காமினி திசாநாயக்கா,
மகாவலி அபிவிருத்தி அமைச்சர்.

மகாவலி அபிவிருத்தி அமைச்சு,
500, ரி. பி. ஜயா மாத்தை ,
கொழும்பு 10,
18 ஆம் திகதி யூன், 1980.

7-180—11.07.80 ந் திகதிய வர்த்தமானி இல. 97